அங்கே அரிசி சரியாக பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலையை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் ஒரு புறக்கணிக்கப்பட்ட மாவட்டமாக இருக்கிறது. தொழிற்துறையில் பின் தங்கிய மாவட்டமாக இருக்கிறது. அங்கே ரப்பர் தொழிற்சாலை ஸ்தாபிக்க வசதி இருக்கிறது. பைபர் இன்டஸ்டிரீஸ் ஸ்தாபிக்க வசதியிருக்கிறது. அதற்கான முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குளித்துறை ஆற்றில் ஆறாமிளக்கடவு, கணபதியான கடவு, திக்குறிச்சி போன்ற இடங்களில் பாலங்கள் கட்ட வேண்டிய முக்கிய அவசியத்தைப் பலதடவைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைச் செய்ய முன்வரவேண்டும். கடலோரப் பகுதியில் பல கிராமங்கள் கடலுக்கு ஆண்டுதோறும் இறையாகிக்கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் கடலுக்கே சில கிராமங்கள் இறையாகிவிடும். ஆகவே, விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டணம்கால் திட்டம் முடிவு அடையும் தருவாயில் இருக்கிறது. விவசாயிகள் அதிகாரிகளிடத்தில், கிளைக் கால்வாய்கள், ஸ்லூயிஸ் மடை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகள் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கருங்கல் டிஸ்டிரிபியூட்டரில் தொடர்ந்து தண்ணீர் விநியோகம் ஒழுங்காக முறையாக இல்லாமல் இருக்கிறது. தொடர்ந்து பயிர்கள் கரிவு ஏற்படுகிறது. அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1—3—1973-ம் நாளன்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவுகளின்படி, பேரவையின் அலுவல்கள் பற்றிய நிகழ்ச்சி விவரம் கீழ்க்கண்டபடி நடக்கும்:—

1—3—1973 முதல் 7—3—1973 வரை	ஏற்கனவே அறிவித்தபடி வரவு செலவு திட்டத்தின் மீது பொது விவாதம்.

8—3—1973 வியாழன்	22	— கூட்டுறவு
9—3—1973 வெள்ளி	6	— பத்திரப் பதிவுத் துறை
	28	— தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்
	39	— எழுதுபொருள் அச்சுத் துறை
10—3—1973 சனி	15	— காவல் துறை
11—3—1973 ஞாயிறு	..	விடுமுறை
12—3—1973 திங்கள்	23	— தொழில்கள்
	25	— கைத்தறித் துணி
	45	— தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு
13—3—1973 செவ்வாய்	17	— மருத்துவம்
	18	— பொதுச் சுகாதாரம்
	43	— பொதுச் சுகாதார மூலதனச் செலவு.
14—3—1973 புதன்	1	— நிலவரித் துறை
	2	— மாநில ஆயத் தீர்வை
	5	— முத்திரைத்தாள்கள் — நிர்வாகம்.
	11	— மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்.
15—3—1973 வியாழன்	8	— தேர்தல்கள்
	9	— மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்.
	36	— பஞ்சத் தணிப்பு
	37	— ஓய்வூதியங்கள்
	38	— பல்வகை
	41	— ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.
	42	— ஜமீந்தார்களுக்கு இழப்பீடு
	50	— ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல்.
	52	— மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

1973 மார்ச் 1]

16—3—1973 வெள்ளி	19 — வேளாண்மை 44 — வேளாண்மை மூலதனச் செலவு 51 — அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூல தனச் செலவு.
17—3—1973 சனி	27 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. 34 — பொதுப்பணிகள் — உதவி மானியங்கள்.
18—3—1973 ஞாயிறு	.. விடுமுறை
19—3—1973 திங்கள்	20 — மீனளம் 29 — பழங்குடி மக்கள், அரிசனங்கள்
20—3—1973 செவ்வாய்	16 — கல்வி
21—3—1973 புதன்	31 — பாசனம் 32 — பொதுப்பணிகள் — பணிகள் 33 — பொதுப்பணிகள் — பணியாளரும், கருவி களும், இயந்திரச் சாதனங்களும் 46 — பாசன மூலதனச் செலவு 47 — பொதுப்பணிகள் மூலதனச் செலவு
22—3—1973 வியாழன்	3 — மோட்டார் வண்டிகள் சட்டங்கள் — நிர்வாகம். 35 — சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் 48 — சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு 14 — சிறைச்சாலைகள்
23—3—1973 வெள்ளி	30 — பின்தங்கிய வகுப்பினர் நலன்: சுற்றுலா
24—3—1973 சனி	24 — சின்கோனு 40 — காட்டுவளத் துறை 49 — காட்டுவள மூலதனச் செலவு 26 — கதர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

25—3—1973 ஞாயிறு	.. விடுமுறை
26—3—1973 திங்கள்	1972-73-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள் அவைக்கு அளித்தல். 12 — 1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம். 10 — பால் வழங்கு திட்டங்கள் 4 — பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிர்வாகம்.
27—3—1973 செவ்வாய்	7 — மாநில சட்ட மன்றம் 21 — கால்நடை வளர்ப்பு 13 — நீதி நிர்வாகம் நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவை அறிமுகம் செய்தல்.
28—3—1973 புதன்	1972-73-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவை அறிமுகம் செய்தல்.
29—3—1973 வியாழன்	நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவுகள் மீது விவாதமும் நிறைவேற்றலும்.
30—3—1973 வெள்ளி	.. அரசினர் சட்ட முன்வடிவுகள்
31—3—1973 சனி	

(ஈ) மதுரை மத்திய சிறையில் திரு. கே. டி. கே. தங்கமணி காவலில் வைக்கப்பட்டுள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு. மதுரை மத்தியச் சிறைச்சாலையின் சூப்பிரண்டெண்ட் அவர்கள் கீழ்க்காணும் தந்தியை அனுப்பியிருக்கிறார்கள்.

" M.L.A., Thiru K. T. K. Thangamani arrested and admitted in this jail on 28th February 1973.

Superintendent, Central Jail, Madurai.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.37 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.